1995 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

68—

கூட்டுறவு விட்டு வசதி சங்கத்தை மாற்றி அமைத்தல்.

36539*–திரு கே. முனிவெங்கடப்பன் :**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தை "கூட்டுறவு வீட்டு வசதி வங்கி" என்று மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தை "கூட்டுறவு வீட்டு வசதி வங்கி" என மாற்றி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் என்பதை வங்கிகளாக மாற்றும் போது இன்னும் கடன் கொடுப்பதற்கு ஏதுவாக, வசதியாக இருக்கும். ஆகவே, எதிர்காலத்திலே அதற்கு திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேங்கிங் ரெகுலேஷன் ஆக்ட் வருவதற்கு முன்பு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள், கூட்டுறவு வீட்டு அடமான வங்கிகள் என்ற பெயரிலே சொல்லப்பட்டு வந்தன. வங்கி என்று சொல்லப்பட்டால் அது ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழும், பேங்கிங் ரெகுலேஷன் ஆக்ட்-ன் கீழும் வரவேண்டும். ஆனால், வங்கிப் பணி எதையும் செய்யாததால் கூட்டுறவு வீட்டு அடமான வங்கிகள், கூட்டுறவு வீட்டு அடமான சங்கங்களாக பெயர் மாற்றம் செய்யப்பட்டன. பின்பு

அனைத்து கூட்டுறவு வீட்டு அடமான சங்கங்கள் எல்லாம் வீட்டு வசதி சங்கங்கள் என்று மாற்றப்பட்டுள்ளன. எனவே, கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களை மீண்டும் கூட்டுறவு வீட்டு வசதி வங்கி என பெயர் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் கிடையாது. எனவே, கேள்வி எழவில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏழைகளின் தெய்வமாக விளங்கும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் கிராம கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வீடு கட்டுவதற்கு 9500 ரூபாய் தருகின்றோம். அது போதுமானதாக இல்லை. அந்தத் தொகையை உயர்த்தி, 15 ஆயிரம் ரூபாயாக கொடுக்க அரசு முன்வருமா என்பதையும், மேலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கருணையோடு இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 8 வட்டங்களை அதிகப்படுத்தி, 9-வது வட்டமாக போச்சம்பள்ளியை அறிவித்து இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய மாவட்ட மக்களின் சார்பாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, மேலும் அந்த போச்சம்பள்ளி வட்டத்திற்கு தனியாக கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் ஆரம்பிக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலமாக, மாநில கூட்டுறவு சங்கங்கள் 15 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்கிற கருத்துரு எதுவும் அரசின் பரிசீலணையில் இல்லை. எனவே, அதுபற்றி எதிர்காலத்தில் நிதித் துறையுடன் கலந்து முடிவு எடுக்க வேண்டும். மேலும், போச்சம்பள்ளியில் தனியாக கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் துவக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களை அதற்காக தனியாக கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 69, செல்வி கோ. மல்லிகா, இருக்கையில் இல்லை.

வினா எண் 70, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.